

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.6.2023) முகாம் அலுவலகத்தில், டாடா குழுமத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் சந்தித்து பேசினார். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உள்ளனர்.

# பழங்குடியின பெண்களுக்கு சொத்தில் சம உரிமை!

## பரிசீலிக்கப்படும் என மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி.க்கு ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூன் 10–

இந்து மதத்தைப் பின்பற்றும் பழங்குடியினப் பெண்களுக்கு சொத்துக்களின் மீது சமமான பங்குகளைப் பெறுவதற்கு ஏதுவாக, இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் நன்மை பயக்கும் விதிகளைப் பயன்படுத்துமாறு ஒன்றிய அமைச்சர்களை கழக மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தார். மேலும், குடியரசுத் தலைவரைச் சந்தித்தபோதும் இதுகுறித்து கோரிக்கை வைத்தார். குடியரசுத் தலைவரும் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறி அக்கடிதத்தை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைத்தார்.



இதனைத் தொடர்ந்து, இந்த விவகாரம் குறித்து பதில் எழுதியுள்ள ஒன்றிய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், இந்த விவகாரம் தொடர்பாக பழங்குடியினர் விவகாரத்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, சமூக நீதித் துறை மற்றும் அதிகாரமளித்தல் துறை ஆகியவற்றின் அமைச்சர்களோடு கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும், மேலும், இந்த விவகாரம் அரசியலமைப்பின் 7வது அட்டவணையின் பிரிவு IIIன் படி மாநிலப்பட்டியலில் வருவதால் மாநில அரசுகளுடனும் கலந்தாலோசனை தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்து பழங்குடியின பெண்கள் சொத்தில் சமபங்கினைப் பெறுவதற்கான உரிமைகள் பரிசீலிக்கப்படும் என்று ஒன்றியஅமைச்சர்கூறியிருப்பதை மகத்தான வெற்றியாக கருதுவதாகவும், பழங்குடியின மகளிருக்கு சம உரிமைகளை வழங்கும் வகையில், அனைத்துத் தரப்பினராலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது மகிழ்ச்சியளிப்பதாகவும் வில்சன் எம்.பி. கூறியுள்ளார்.

---

### சேலம் மாவட்டத்தில் கலைஞர் சிலை, மேட்டூர் அணை திறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும்


# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வரவேற்க லட்சக்கணக்கானோர் திரண்டு உற்சாக வரவேற்பு!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், ஜூன் 10 -

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் முதலீடு ஈர்க்க வெளி நாடுகளில் சென்று முதலீடுகளை ஈர்த்து வந்து முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறார். ஈடில்லாத ஆட்சி ஈராண்டு சாட்சி என்று மக்கள் போற்றும் வகையில் ஆட்சியை நடத்தி வருகிறார். மேலும் இந்திய துணை கண்டமே வியந்து பார்க்கும் அளவிற்கு திராவிட மாடல் ஆட்சியை



தளபதியார் அவர்கள் நடத்தி வருகிறார்.

அதன்படி சேலம் மாவட்டத்தில் சுமார் 2,000 கோடி மதிப்பில் திட்டங்களை அறிவித்து முடிவுற்ற பணிகளை திறந்து வைக்கும் புதிய திட்ட ங்களுக்கு அடிக்கல் நாட்டவும் வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இன்று ( 10.06.2023 - சனிக்கிழமை) மாலை சேலத்திற்கு விமானம் மூலம் வருகை தர இருக்கிறார்.

சேலம் வந்தடையும் முதலமைச்சர் அஸ்தம்பட்டி ஓய்வு மாளிகையில் தங்குகிறார். நாளை ( 11.06.2023 -ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணிக்கு அரசு பயணியர் மாளிகையில் இருந்து புறப்பட்டு செரிரோடு, அம்பேத்கர் சிலை, தமிழ் சங்கம் வழியாக அறிஞர் அண்ணா பூங்கா வருகை தந்து, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருஉருவச் சிலையினை திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து பழைய பேருந்து நிலையம் சென்று, ஈரடுக்கு பேருந்து நிலையம், பெரியார் பேரங்காடி, வ.உ.சி. மார்க்கெட், நேரு கலையரங்கம் ஆகியவற்றை திறந்து வைக்கிறார். அதன் பின்னர் காலை 10 மணிக்கு கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரியில் நடக்கும் விழாவில் கலந்து கொண்டு, சேலம் மாவட்ட மக்கள் பயன் பெறும் வகையில் சுமார் 50 ஆயிரம் பேருக்கு, நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிப்பதோடு, அரசு சட்டக்கல்லூரி, இளம் பிள்ளை கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளிட்ட திட்டங்களையும் தொடங்கி வைக்கிறார்.

அன்று மாலை மேட்டூர் செல்லும் முதலமைச்சர் அடுத்த நாள் ஜூன் 12ம் தேதி காலையில் மேட்டூர் அணையில் இருந்து விவசாயிகளின் பயன்பாட்டிற்கு தண்ணீர் திறந்து வைக்கிறார். இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் பொதுமக்களும், நிர்வாகிகளும், தோழர்களும் அலை கடலென ஆர்ப்ப ரித்து கலந்து கொள்ள வேண்டும். மேலும், இளைஞர்கள், மகளிர், மாணவர் அணியினர் என பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் திரண்டு வந்து தலைவரை வரவேற்பது அனைத்து நிகழ்ச்சிகளிலும் அனைவரையும் பங்கேற்க செய்வது என அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும்.

இவ்வாறு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### எடப்பாடி பழனிசாமி கைதுக்கு கண்டன ஆர்ப்பாட்டம்!

# அ.தி.மு.க.வினர் மீதான வழக்கை ரத்து செய்ய முடியாது!

## கூடுதல் அரசு வழக்கறிஞர் பா.நம்பிசெல்வன் வாதத்தையடுத்து - மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவு!

மதுரை, ஜூன் 10 -

எடப்பாடி பழனிசாமி கைதுக்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினர் மீதான வழக்கை ரத்து செய்ய முடியாது என்று மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

திண்டுக்கல் மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் ராஜ்மோகன், அ.தி.மு.க. நிர்வாகி ராஜன் ஆகியோர் மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

கடந்த ஆண்டு தமிழக சட்டசபை எதிர்க்கட்சி துணைத்தலைவராக முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அங்கீகாரம் செய்யப்பட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி சென்னையில் உண்ணாவிரதம் இருக்க முயன்றார். இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர்.

போலீசாரின் இந்த நடவடிக்கையை கண்டித்து திண்டுக்கல் - திருச்சி சாலையில் அமைதியான முறையில் பொதுமக்களுக்கு எந்த தொந்தரவும் இல்லாத வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றோம்.

ஆனால் நாங்கள் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்ததாகவும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் கூறி, திண்டுக்கல் டவுன் மேற்கு போலீசார் நாங்கள் உள்பட 18 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே எங்கள் மீது வழக்குப்பதிவு செய்து உள்ளனர். இந்த நடவடிக்கை பழிவாங்கும் வகையில் உள்ளது. எனவே எங்கள் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தனர்.

இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது கூடுதல் அரசு வழக்கறிஞர் பா.நம்பிசெல்வன் ஆஜராகி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் மனுதாரர் தரப்பினர் நடக்க முயன்றதால்தான் போலீசார் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து உள்ளனர். மனுதாரர் உள்ளிட்டோர் மீதான வழக்கில் போலீசார் முறையாக விசாரணை நடத்தி குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்து விட்டனர். எனவே மனுதாரர்களின் கோரிக்கை ஏற்புடையதல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதாடினார்.

விசாரணை முடிவில், மனுதாரர்கள் மீதான வழக்கில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டதால், அவர்கள் மீதான வழக்கை ரத்து செய்ய முடியாது.

எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுதாரர்கள் தேவைப்பட்டால் புதிதாக மனு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக் கொள்ளலாம் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

---